நரேந்திர சிங் தோமர்
வேளாண்மை மற்றும் விவசாயிகள்
நலத்துறை அமைச்சர்,
இந்திய அரசு

सत्यमेव जयते

17 டிசம்பர், 2020

# விவசாய சகோதர சகோதரிகளுக்கு வேளாண் துறை அமைச்சரின் கடிதம்

**அன்பான விவசாய சகோதர, சகோதரிகளே,**

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வேளாண்மைத்துறை சீர்திருத்தங்கள் குறித்து கடந்த சில தினங்களாக நான் உங்களுடன் தொடர்ந்து தொடர்பில் இருந்து வருகிறேன். கடந்த சில நாட்களில் பல்வேறு மாநிலங்களின் விவசாய அமைப்பினருடன் நான் கலந்துரையாடி இருக்கிறேன். இந்த வேளாண்மை சீர்திருத்தங்களை பல விவசாய அமைப்புகள் வரவேற்றிருக்கின்றன; சீர்திருத்தங்களால் அவர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். விவசாயிகளிடம் புதிய நம்பிக்கை பிறந்திருக்கிறது. நாட்டிலும் புதிய நம்பிக்கை பிறந்திருக்கிறது.

புதிய சீர்திருத்தங்களின் பயன்களை பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் எப்படி அனுபவிக்கத் தொடங்கி இருக்கிறார்கள் என்பதற்கான உதாரணங்கள் குறித்த தகவல்கள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன.

ஆனால் அதே சமயத்தில், மறுபுறத்தில் இந்தச் சட்டங்கள் குறித்து சில விவசாய அமைப்புகள் ஒரு மாயையை உருவாக்கியுள்ளன.

ஒவ்வொரு விவசாயிக்கும் உள்ள சந்தேகங்களை நீக்கும் வகையில், அவர்களிடம் உள்ள குழப்பங்களை நீக்க வேண்டியது, நாட்டின் வேளாண்மைத் துறை அமைச்சர் என்ற வகையில் எனது கடமையாக உள்ளது. வயலுக்குத் தண்ணீர் பாய்ச்ச நடு இரவில் எழுவது, தொடர்ந்து தண்ணீர் பாய்வதால் கரைகள் உடையும் போது அதைத் தடுத்து நிறுத்த ஓடிச் செல்வது, காலந்தவறிய மழையால் ஏற்படும் பயம், உரிய காலத்தில் மழை பெய்யும் போது மகிழ்ச்சி என இவை எல்லாமே என் வாழ்விலும் அனுபவித்த விஷயங்கள் தான்! அறுவடை செய்த பொருள்களை விற்பதற்கு நானும் வாரக் கணக்கில் காத்திருந்திருக்கிறேன்.

இத்தகைய சூழ்நிலைகளிலும், நாட்டின் விவசாயிகள் தொடர்ந்து கூடுதலாக உணவுப் பொருள்களை விளைவிக்க முயற்சி செய்து கொண்டே இருக்கிறார்கள். கொரோனா நெருக்கடி காலத்திலும் இந்திய விவசாயிகளின் கடின உழைப்பையும், மன உறுதியையும் நாம் பார்த்திருக்கிறோம். அமோக அறுவடையின் மூலம் நாட்டின் பொருளாதார வளர்ச்சியை வேகப்படுத்துவதற்கு விவசாயிகள் உதவியுள்ளனர். இதற்கிடையில், எதிர்காலத்தில் இன்னும் அதிக விளைச்சல் கிடைக்கும் வகையில், கூடுதல் நிலப்பரப்பில் விதைப்புப் பணிகளையும் அவர்கள் மேற்கொண்டுள்ளனர்.



புதிய சட்டங்கள் உருவாக்கப்பட்ட பிறகு, குறைந்தபட்ச ஆதார விலைகளின் (எம்.எஸ்.பி.) அடிப்படையில் அரசு செய்திருக்கும் கொள்முதல்கள் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு சாதனை அளவாக அதிகரித்துள்ளன என்பதில், வேளாண்மைத் துறை அமைச்சர் என்ற வகையில், நான் திருப்தி அடைந்திருக்கிறேன். குறைந்தபட்ச ஆதார விலையில் கொள்முதல் செய்வதில் அரசு புதிய சாதனை படைத்திருக்கும் சமயத்தில், கொள்முதல் மையங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில், எம்.எஸ்.பி. நடைமுறை கைவிடப்படும் என்று விவசாயிகளிடம் சிலர் பொய் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

அரசியல் ஆதாயத்திற்காக தூண்டப்பட்டு, சிலர் பரப்பிவிடும் இத்தகைய அப்பட்டமான பொய்களை விவசாயிகள் அடையாளம் கண்டு நிராகரிக்க வேண்டும் என்று வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறேன். உற்பத்திச் செலவைக் காட்டிலும் 1.5 மடங்கு அளவுக்கு எம்.எஸ்.பி. விலையை அரசு உயர்த்தியுள்ளது. கடந்த 6 ஆண்டுகளில் எம்.எஸ்.பி. அடிப்படையிலான கொள்முதலுக்கு அரசு அளித்த தொகை, முந்தைய

| பொய்த் தகவல் | உண்மைத் தகவல் |
|---|---|
| குறைந்தபட்ச ஆதார விலை நடைமுறை கைவிடப்படும்.<br>வேளாண் விளைபொருள் விற்பனைக் குழு மண்டிகள் மூடப்படும். | எம்.எஸ்.பி. நடைமுறை இன்னும் தொடர்கிறது, மேலும் தொடர்ந்து செயல்படும்.<br>ஏ.பி.எம்.சி. மண்டிகள் தொடர்ந்து செயல்படும். ஏ.பி.எம்.சி. மண்டிகள் இந்தச் சட்டத்தின் வரம்பிற்குள் வரவில்லை. |
| விவசாயிகள் நிலத்துக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. | பயிர்களுக்கு மட்டும் தான் ஒப்பந்தமே தவிர, நிலத்துக்கு அல்ல.<br>நிலத்தின் அனுபவ உரிமையை மாற்றித் தருதல், விற்பனை, குத்தகை அல்லது அடமானம் போன்ற எந்த விதமான ஒப்பந்தமும் கிடையாது. |
| விவசாயிகள் ஏதும் கடன் நிலுவை வைத்திருந்தால், அவருடைய நிலத்தை ஒப்பந்ததாரர் பறித்துக் கொள்ள முடியும். | எந்தச் சூழ்நிலையிலும், விவசாயிகளின் நிலம் முழு பாதுகாப்புடன் இருக்கும். |
| ஒப்பந்த வேளாண்மையில், விலைகள் குறித்து விவசாயிகளுக்கு உத்தரவாதம் இல்லை. | விளைபொருளுக்கான கொள்முதல் விலை, வேளாண்மை ஒப்பந்தத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கும். |
| விவசாயிகளுக்குப் பணம் தரப்படாது. | நிர்ணயிக்கப்பட்ட கால வரம்புக்குள் விவசாயிக்குப் பணம் தரப்பட வேண்டும். அப்படித்தரத் தவறுபவர்கள் சட்ட நடவடிக்கையை சந்திக்க வேண்டும், அபராதம் விதிக்கப்படும். |
| ஒப்பந்த வேளாண்மையைத் தொடங்க இதற்கு முன்னர் எந்தவிதமான முயற்சியும் எடுக்கப்படவில்லை. | பல மாநிலங்கள் ஒப்பந்த வேளாண்மைக்கு அனுமதி அளித்துள்ளன. ஒப்பந்த வேளாண்மை குறித்து பல மாநிலங்களில் சட்டங்களும் உள்ளன. |
| இந்தச் சட்டங்கள் குறித்து விவாதம் அல்லது கலந்தாடல் நடைபெறவில்லை. | இரண்டு பத்தாண்டு காலமாக இதுகுறித்து விவாதிக்கப்பட்டுள்ளது.<br><br>2000-வது ஆண்டில் சங்கர்லால் குரு கமிட்டியில் இது தொடங்கியது. அதன்பிறகு 2003-இல் மாதிரி ஏ.பி.எம்.சி. சட்டம்; 2007 ஏ.பி.எம்.சி. விதிமுறைகள்; 2010-இல் ஹரியானா, பஞ்சாப், பிகார் மற்றும் மேற்குவங்கத்தில் முதல்வர் கமிட்டிகள் அமைக்கப்பட்டன; 2017 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் சந்தை (ஒழுங்குமுறை) பற்றிய ஏ.பிஎல்.எம். மாதிரிச் சட்டம்; 2020-இல் இந்தச் சட்டங்களுக்கு நாடாளுமன்ற ஒப்புதல் என நிகழ்ந்துள்ளது. |

காலத்தை விட இரு மடங்கு அதிகரித்துள்ளது. இந்தச் சூழ்நிலையில், எம்.எஸ்.பி. நடைமுறையை அரசு ஒருபோதும் கைவிடாது. இத் திட்டம் தொடர்ந்து அமலில் இருக்கும்.

விவசாய, சகோதர சகோதரிகளே,

விவசாயிகள் நலன் என்பது பிரதமர் திரு. நரேந்திர மோடியின் வாழ்வில் மிக முக்கியமான கடமையாக இருந்து வருகிறது. விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கவும், அவர்கள் வாழ்வில் வளம் பெருகவும், பிரதமர் தலைமையில் இந்த அரசு தொடர்ச்சியாக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

விவசாயிகளுக்கு அதிகாரம் கிடைக்கச் செய்வதற்காக, விதைகள் தொடங்கி சந்தைப்படுத்துதல் வரையில் கடந்த 6 ஆண்டுகளில் பல முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. இதனால் விவசாயிகளின் பிரச்சினைகள் குறைந்து, லாபம் அதிகரிக்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

நம் நாட்டில் 80 சதவீத சிறு விவசாயிகள் ஒன்று அல்லது இரண்டு ஏக்கர் நிலம் தான் வைத்திருக்கிறார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். சுதந்திரம் பெற்றதில் இருந்து தங்கள் வாழ்க்கைக்கான தேவைக்காக மட்டும் அவர்கள் விவசாயம் செய்து வந்திருக்கிறார்கள். அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளால் இந்த விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர்.

பிரதமரின் கிசான் சம்மான் நிதித் திட்டத்தின் மூலம் ஆண்டுதோறும் அவர்களுக்கு ரூ.6000 அளிப்பதால், நெருக்கடியான காலத்தில் வெளியில் கடன் வாங்கும் கட்டாயம் ஏற்படாமல் தவிர்க்கப்படுகிறது. இயற்கைப் பேரழிவால் பயிர்கள் சேதம் அடையும் போது பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் நஷ்டஈடு கிடைக்கிறது. மண் வள அட்டையின் மூலம் தங்கள் நிலத்தின் வளம் பற்றி விவசாயி தெரிந்து கொள்கிறார். வேம்பு தடவிய யூரியா அளிக்கப்படுவதால், அது கள்ளச்சந்தைக்குப் போகாமல் தடுக்கப்பட்டு, விவசாயிகளுக்கு எளிதாகக் கிடைக்கிறது. `அன்னமிடுபவர்கள்' என்பது `ஆற்றல் மிக்கவர்களாக' என்று மாற வேண்டும் என்ற இலக்கை நோக்கி நாடு முன்னேறிக் கொண்டிருக்கிறது.

பெரும்பாலான சேமிப்புக் கிடங்குகள், குளிர்பதன நிலையங்கள் மற்றும் பதப்படுத்தல் மையங்கள் பெரிய நகரங்களுக்கு அருகில் தான் இருக்கின்றன, கிராமப் பகுதிகளில் இவை இல்லை என்பது விவசாயிகள் சந்திக்கும் பெரிய பிரச்சினைகளில் ஒன்றாக இருக்கிறது. இதனால், இந்த வசதிகள் மூலம் கிடைக்கும் ஆதாயங்கள் விவசாயிகளுக்குக் கிடைக்காமல் போகிறது. இந்த குறைபாட்டை நீக்குவதற்கு ரூ.1 லட்சம் கோடியில் வேளாண்மைக் கட்டமைப்பு நிதியம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த முயற்சிகளுக்கு இடையில், ரத்தத்தை வியர்வையாகச் சிந்தி உழைத்து தாங்கள் விளைவித்த பொருள்களை, சந்தை வசதி இல்லாத காரணத்தால் விவசாயிகளிடமிருந்து சிலர் மிகக் குறைவான விலைக்கு வாங்குவதை நாங்கள் பார்த்தோம். தாங்கள் விளைவித்த பொருளுக்கு தன் நிலத்தில் விலை நிர்ணயம்

செய்யவோ அல்லது தான் விரும்பிய இடத்தில் விற்கவோ இந்திய விவசாயிகளுக்கு உரிமை கிடையாது.

விவசாயிகளுக்கு இந்தக் கட்டாயம் இருப்பதை எல்லோரும் அறிந்துள்ளனர், புரிந்து கொண்டுள்ளனர். முந்தைய அரசுகளும் கூட விவசாயிகளுக்கு மண்டிகளுடன், வெளிச்சந்தை வசதி தேவை என கூறி வந்துள்ளன. இது குறித்த கலந்தாடல் அடல் பிகாரி வாஜ்பாய் காலத்தில் 2001 ஆம் ஆண்டில் தொடங்கியது. அவருக்குப் பிறகு 10 ஆண்டுகள் காங்கிரஸ் அரசு இருந்த போதும் இந்தச் சீர்திருத்தங்களை ஆதரித்தது; தங்களுடைய தேர்தல் அறிக்கையில் இந்தச் சீர்திருத்தங்களை அவர்களும் கூறியிருந்தனர்.

விவசாயிகளின் கைகளைக் கட்டி வைக்கக் கூடிய பழைய நடைமுறையில் யாருக்குமே ஒப்புதல் கிடையாது என்பது தான் உண்மை. தங்களது விளைபொருள்களை விற்க வேறு வாய்ப்புகள் தரக்கூடாது என்றோ அல்லது முந்தைய நடைமுறையே சிறந்தது என்றோ, கடந்த 20-25 ஆண்டுகளாக எந்த விவசாயத் தலைவர்களும் அல்லது எந்த விவசாய அமைப்பும் அறிக்கை வெளியிடவில்லை என்பதை இன்றைக்கு, இந்தக் கடிதம் மூலம் உங்களுக்குத் தெரிவிக்க நான் விரும்புகிறேன். நமது நாட்டில் இது மாதிரியான அடிமைத்தனத்தில் இருந்து நாம் விடுதலை பெற வேண்டும் என்று பெரிய விவசாய அமைப்புகள் போராடி வந்துள்ளன. இது மாதிரியான சீர்திருத்தங்கள் இல்லாமல், இந்திய விவசாயிகளின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்துவது சிரமம் என்று வேளாண்மை நிபுணர்களும் கூறியுள்ளனர்.

``2014-இல் தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு பதவியேற்ற போது, இந்தச் சீர்திருத்தங்கள் பற்றி மீண்டும் புதிதாக நாங்கள் கலந்தாடல்களைத் தொடங்கினோம். மாதிரிச் சட்டங்கள் மாநில அரசுகளுக்கு அனுப்பப்பட்டன. மாநில முதல்வர்கள் கலந்துகொண்ட குழுக்களில் கலந்தாடல்கள் நடந்தன. ஆறு மாதங்களில், இது குறித்து நாட்டில் பல கோடி விவசாயிகளிடம் தெரிவித்தோம். 1.5 லட்சம் பயிற்சி முகாம் மற்றும் இணையவழி சந்திப்புகளில், விவசாயிகள் பிரச்சினைகள் தொடர்பாகவும், புதிய வேளாண்மைச் சட்டம் குறித்தும் கலந்தாடல் செய்யப்பட்டது. அதன் பிறகு தான் புதிய வேளாண்மைச் சட்டங்கள் அமலுக்கு வந்துள்ளன.

விவசாய சகோதர, சகோதரிகளே,

மண்டிகள் இன்னும் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன, எதிர்காலத்திலும் தொடர்ந்து செயல்படும். வேளாண் விளைபொருள் விற்பனைக்குழு சந்தைகள் மேலும் பலப்படுத்தப்படுகின்றன. அத்துடன், உங்கள் வீட்டு வாசலிலேயே உங்கள் விளைபொருளை நல்ல விலைக்கு விற்பதற்கு, வெளிச்சந்தை விற்பனைக்கும் வாய்ப்பு அளிக்கப்படுகிறது. சொல்லப்போனால், விளைநிலத்தில் இருந்து மண்டிகளுக்கு விளைபொருளை எடுத்துச் செல்லும் செலவு மிச்சமாகிறது. மண்டிகளைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பும் உள்ளது. முன்பு உள்ளதைப் போலவே வேளாண் விளைபொருள் மண்டிகள் தொடர்ந்து செயல்படும். கடந்த 5 - 6 ஆண்டுகளில் வேளாண்மை மண்டிகளை

நவீனப்படுத்த அரசு பல கோடி ரூபாய் செலவு செய்துள்ளது. வரக்கூடிய காலங்களில் இவை மேலும் நவீனப்படுத்தப்படும்.

இத்தகைய நடவடிக்கைகளால் பாதிக்கப்படக்கூடிய தரப்பினர் தான், விவசாயிகளின் நிலத்தைப் பிடுங்கிவிடுவார்கள் என்று பொய்யை பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். விளைபொருளுக்கு மட்டும் தான் ஒப்பந்தம் போடப்படுகிறது என்ற நிலையில், விளைநிலம் எப்படிப் பறிபோகும்? நிலம் விவசாயிக்குதான் சொந்தம் என்று புதிய சட்டம் தெளிவாகக் கூறுகிறது. ஸ்வாமித்வா திட்டத்தின் கீழ், கிராமத்தில் வாழும் குடும்பத்தினருக்கு நில உரிமையை அளிக்கும் அரசாங்கம், விவசாயிகளிடம் இருந்து ஓர் அங்குல நிலத்தைக் கூட யாரும் பறிப்பதை அனுமதிக்காது.

எண்ணத்தாலும், கொள்கையாலும் விவசாயிகளின் நலனில் எங்கள் அரசு அக்கறை கொண்டுள்ளது.

சகோதர சகோதரிகளே,

குறைந்த பட்ச ஆதார விலை, மண்டிகள் மற்றும் நில உரிமை தொடர்பான அனைத்து சந்தேகங்களையும், குழப்பங்களையும் தெளிவுபடுத்த அரசு தொடர்ந்து முயற்சிகள் செய்து வருகிறது.

நாங்கள் தொடர்ந்து விவசாயிகள் மற்றும் விவசாய அமைப்புகளுடன் பேச்சு நடத்தி வருகிறோம். அவர்களின் சந்தேகங்களைத் தீர்த்து வைக்க நாங்கள் எப்போதும் தயாராக இருக்கிறோம்.

ஆனால் விவசாயிகள் என்ற போர்வையில் சில அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புகள் உருவாக்கியுள்ள குழப்பமான சூழ்நிலையையும் புரிந்து கொள்ள வேண்டியது முக்கியமானதாக உள்ளது.

நடுநிலைவாதிகள் என்றும் அறிவு ஜீவிகள் தங்களை கூறிக் கொள்பவர்கள், தங்களுடைய வார்த்தைகளையே வெட்கமின்றி மறுத்துப் பேசுவது துரதிருஷ்டவசமானதாக உள்ளது. ஆனால் மக்களிடம் இருந்து எதையும் மறைக்கவில்லை. அவர்களுடைய பழைய அறிக்கைகளை மட்டுமின்றி, இப்போது அம்பலமாகியுள்ள நிஜ முகத்தையும் மக்கள் கூர்ந்து கவனித்து வருகிறார்கள்.

அரசியல் ஆதாயங்களுக்காக அரசுக்குக் கெடுதல் செய்யலாம் என்று இவர்கள் நினைக்கிறார்கள். இந்த நாட்டின் விவசாயிகளான, நாட்டின் இளைஞர்களான நீங்கள் தான் அவர்களுடைய இலக்கு! அப்பாவி விவசாயிகளை அரசியலில் பொம்மைகளாக ஆக்கிட இவர்கள் முயற்சி செய்கிறார்கள்.

விவசாயிகளின் நண்பனாக இருந்தால், சுவாமிநாதன் கமிட்டி அறிக்கையை காங்கிரஸ் அரசு எப்படி எட்டு ஆண்டுகள் கிடப்பில் போட்டிருக்க முடியும்?

தங்கள் விளைபொருள்களை விற்க மண்டிகளைத் தவிர, வேறு வாய்ப்புகளும் இருக்க வேண்டும் என்று தங்கள் தேர்தல் அறிக்கையில் கூறிய காங்கிரஸ், விவசாயிகளை அடிமைத்தனத்திலேயே வைத்திருக்க இப்போது எப்படி

விரும்ப முடியும்? இந்தச் சீர்திருத்தங்களுக்கு ஆதரவாக கடிதங்கள் எழுதிய காங்கிரஸ் அரசின் வேளாண் துறை அமைச்சர் இப்போது எப்படி தனது நிலைப்பாட்டை முழுமையாக மாற்றிக் கொள்ள முடியும்?

விவசாயிகள் தங்கள் விளைபொருள்களை மண்டிகளுக்கு வெளியிலும் விற்க அனுமதிக்கப்படும் என்று பஞ்சாப் தேர்தலின் போது தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்ட ஆம் ஆத்மி கட்சி அதற்கு எதிராக இப்போது எப்படிப் பேச முடியும்?

நீர்ப்பாசன முறை சீர்திருத்தங்களை ஹூடா கமிட்டி வலியுறுத்தியுள்ளது. அந்தக் கமிட்டியில் அகாலிதளம் கட்சியின் உயர் தலைவர்களும் இருந்தனர்; ஆனால் இன்றைக்கு ஏன் அவர்கள் வேறு மாதிரி பேசுகிறார்கள்?

இரண்டு - மூன்று மாதங்களுக்கு முன்பு வரையில் இந்தச் சீர்திருத்தங்களை ஆதரித்த மற்றும் அரசைப் பாராட்டிய விவசாய அமைப்புகள், திடீரென இப்போது ஏன் போராட வேண்டும்?

**என் விவசாய சகோதர, சகோதரிகளே,**

பெரிய பெரிய அறிவிப்புகள், பெரிய பெரிய வாக்குறுதிகளைக் கொடுத்து நாட்டில் வாக்குகளைப் பெறக் கூடிய அரசியல் பல தசாப்த காலமாக இருந்து வந்தது.

வாக்குறுதிகளை, அறிவிப்புகளை முழுமையாக நிறைவேற்றக் கூடிய ஓர் அரசாங்கத்தை இப்போது தான் நாடு பார்த்துக் கொண்டிருக்கிறது.

எங்களுக்கு மக்கள் மத்தியில் ஆசிகள் அதிகரித்து வருவதைப் பார்த்து, விவசாயிகள் மத்தியில் பொய்களையும், புரளிகளையும் பரப்புவதன் மூலம், அரசியலில் இழந்த ஆதரவை மீட்கலாம் என்று கருதியுள்ளனர்.

இந்தக் குழப்பத்தைத் தெளிவுபடுத்த வேண்டியது எங்களுடைய கடமை. எனவே, போராடி வரும் விவசாயிகள் கூறும் ஒவ்வொரு பிரச்சினைக்கும் தீர்வு காண நாங்கள் தொடர்ந்து முயற்சித்து வருகிறோம்.

ஆனால், விவசாயிகளின் நலனில் அக்கறை இல்லாதவர்களும் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதால் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டியுள்ளது. கடந்த ஆறு ஆண்டுகளில், ஒரே மாதிரியான அமைப்புகளைச் சேர்ந்த, ஒரே மாதிரியான நெறிகளைக் கொண்டவர்கள் சமூகத்தில் அதிருப்தியை பரப்பி, பல்வேறு போர்வைகளில் இருந்து கொண்டு நாட்டில் குழப்பத்தை உண்டாக்கிக் கொண்டு வருகிறார்கள். சில நேரங்களில் மாணவர்கள், அல்லது தலித் மக்கள், சில நேரங்களில் பெண்கள் அல்லது சிறுபான்மையினர் குழுக்கள் என்ற போர்வையில் அவர்கள் செயல்படுகின்றனர்.

இன்றைக்கு அவர்கள் மீண்டும் உழவர்கள் பெயரில் செயல்படுகின்றனர். அரசியல் ஆதாயத்துக்காக வன்முறை மற்றும் குழப்பத்தை நேரடியாகவும், மறைமுகமாகவும் இவர்கள் ஊக்குவித்து வருகிறார்கள்.

நாட்டுக்கு உணவளிக்கும் மக்களின் பின்னால் அவர்கள் ஒளிந்து கொண்டு, கலவரம், வன்முறை பரப்புதல் ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் கைதானவர்களை உடனே



விடுவிக்க வேண்டும் என்று அழுத்தம் கொடுக்கின்றனர்.

நாட்டின் விவசாயிகளின் பின்னால் இவர்கள் ஒளிந்து கொண்டு மகாத்மா காந்தியின் சிலையை சேதப்படுத்தி, போற்றுதலுக்குரிய பாபுஜியை அவமதித்துள்ளனர். சம்பாரனில் விவசாயிகளுக்காக சத்யாகிரகப் போராட்டத்தை பெரிய அளவில் தொடங்கிய அதே பாபுஜியை அவர்கள் அவமதித்துள்ளனர்.

விவசாயிகளுக்குப் பாசன நீர் சென்று சேருவதைத் தடுப்பதற்கு, இந்தக் கூட்டத்தினர் பல ஆண்டுகள் சட்டத்தின் எல்லா வழிகளையும் முயற்சி செய்து பார்த்தனர். விவசாயிகளுக்கு மின்சாரம் தரும் வேலைகளுக்கு இவர்கள் தடை போட்டார்கள். அணைகள் கட்டும் பணிகளை பல ஆண்டுகளாகத் தடுத்து வந்தார்கள். இன்றைக்கு விவசாயிகளின் நண்பன் என்பது போல காட்டிக் கொள்ள முயற்சித்து கபட நாடகம் ஆடுகின்றனர்.

தற்சார்பான இந்தியா என்ற உறுதியை நோக்கி நாடு முன்னேறும் நிலையில், `உள்ளூர்ப் பொருளுக்கு முக்கியத்துவம் தருதல்' என்ற நிலையை நோக்கிச் செல்லும்போது, இந்தியப் பொருள்களைப் புறக்கணிக்க வேண்டும் என்ற இந்த மனிதர்களின் எண்ணங்களைப் புரிந்து கொள்ள வேண்டும்.

தரையில் பல அடி உயரத்திற்கு பனி படர்ந்துள்ள நிலையில், லே- லடாக் பகுதியில் எல்லையில் பாதுகாப்பு சவால்கள் எழுந்திருக்கும் போது, எல்லைக்கு ராணுவ வீரர்களுக்கான பொருள்களை எடுத்துச் செல்லும் ரயில்களை மறிப்பவர்கள் விவசாயிகளாக இருக்க முடியாது.

இவர்களால் தான் படையினருக்கான தளவாடங்கள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களை விமானம் மூலமாகவும், வேறு வசதிகள் மூலமாகவும் நாங்கள் கொண்டு செல்ல வேண்டியதாயிற்று. இந்த மாற்று ஏற்பாடுகளுக்காக, மக்களின் கடின உழைப்பில் கிடைத்த பணம் தான் செலவிடப்பட்டுள்ளது.

இவர்களில் பலர் 1962-இல் நடைபெற்ற போரின் போதும் நாட்டுக்கு ஆதரவு அளிக்காதவர்கள்.

இப்போதும் இவர்கள் 1962ஆம் ஆண்டைப் போலவே பேசுகின்றனர்.

இழிவான எண்ணங்கள் மற்றும் போலித்தனமான செயல் பாடுகள் மூலமாக விவசாயிகளின் மனதில் நஞ்சை விதைத்து கெடுதலை ஏற்படுத்த இவர்கள் முயற்சி செய்கின்றனர்.

இந்தப் போராட்டத்தைத் தொடங்கிய போது தங்களின் இலக்கு என்னவாக இருந்தது, இப்போது உண்மையில் என்ன நடக்கிறது

என்பதை, நமது விவசாய சகோதர சகோதரிகள் இன்றைக்கு சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

புரளிகள் மீது கவனம் செலுத்தாமல், எல்லா விஷயங்களையும் உண்மைகளின் அடிப்படையில் மறு சிந்தனை செய்து மதிப்பீடு செய்ய வேண்டும் என்று இந்தக் கடிதத்தின் மூலம் உங்களை நான் கைகூப்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

உங்களுடைய அனைத்து சந்தேகங்கள் மற்றும் அச்சங்களை நீக்க வேண்டியது எங்கள் அரசின் கடமை. இந்தக் கடமையில் இருந்து ஒருபோதும் நாங்கள் பின்வாங்கியதில்லை, ஒருபோதும் பின்வாங்கவும் மாட்டோம்.

``எல்லோருடைய வளர்ச்சிக்காகவும், எல்லோருடைய நம்பிக்கையுடனும் எல்லோரும் ஒன்றுபட்டிருத்தல்'' என்ற மந்திரத்தைப் பின்பற்றி, பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான எங்கள் அரசு, பாகுபாடு இல்லாமல் எல்லோரின் நலன்களையும் பாதுகாக்க முயற்சிகள் செய்து வருகிறது. கடந்த ஆறு ஆண்டுகளின் வரலாறு இந்த உண்மைக்கு சாட்சியாக உள்ளது.

நம்பிக்கை கொள்ளுங்கள், விவசாயிகளின் நலனுக்காகக் கொண்டு வரப்பட்ட இந்தச் சீர்திருத்தங்கள் இந்திய விவசாயத்தில் புதிய அத்தியாயத்தை உருவாக்கும், நாட்டின் விவசாயிகள் அதிக சுதந்திரம் பெற்றவர்களாக, அதிகாரம் பெற்றவர்களாக மாறிட வழிவகுக்கும்.

இந்த வேளாண்மைச் சீர்திருத்தங்கள் மூலம் கிடைக்கும் சக்தியுடன், நாம் அனைவரும் ஒன்றுபட்டு இந்தியாவை விவசாயத்தில் வளமையான, வசதிமிக்க நாடாக ஆக்குவோம்.




**நரேந்திர சிங் தோமர்**

## விவசாயிகளுக்கான வாக்குறுதிகள்

குறைந்தபட்ச ஆதார விலை. குறித்து எழுத்துப்பூர்வ உத்தரவாதம் அளிக்க அரசு தயாராக உள்ளது.

வேளாண் விளைபொருள் சந்தைக்குழுக்களுக்கு வெளியில் செயல்படும் தனியார் சந்தைக்கு வரி வசூலிக்க மாநிலங்கள் அனுமதிக்கப்படும்.

எந்த சர்ச்சைகள் எழுந்தாலும் நீதிமன்றத்தை நாட விவசாயிகளுக்கு வாய்ப்பு அளிக்கப்படும்.

வேளாண்மை ஒப்பந்தத்தைப் பதிவு செய்ய மாநிலங்களுக்கு உரிமை அளிக்கப்படும்.

யாரும் சட்டவிரோதமாக நிலத்தைக் கையகப்படுத்த முடியாது. ஏனெனில், விவசாய நிலப் பயன்பாட்டு உரிமையில் மாற்றம், விற்பனை, குத்தகைகள் மற்றும் அடமானம் வைக்கும் எந்த அம்சமும் இந்தச் சட்டத்தில் இல்லை.

விவசாயிகளின் நிலத்தில் நிரந்தரமான எந்த மாற்றத்தையும் ஒப்பந்ததாரர்கள் செய்ய முடியாது.

விவசாயிகளின் நிலத்தில் தற்காலிகக் கட்டுமானம் எதுவும் மேற்கொள்ள ஒப்பந்ததாரருக்கு கடன் தரப்படாது.

எந்தச் சூழ்நிலையிலும், விவசாயிகளின் நிலத்தைப் பறிமுதல் செய்ய சட்டம் அனுமதிக்காது.